**விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் அறிவுறுத்தல்களை வாசித்த பின்னர் விண்ணப்ப படிவத்தினை நிரப்பவும்:

**01. விண்ணப்பத்தை செயற்படுத்துவதற்கான கட்டணம்**

விண்ணப்பத்தை செயற்படுத்துவதற்கான கட்டணம் ரூபா 1,500.00 ஆகும். இதனை ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற Pay-In- Voucher (PIV) மூலம் செலுத்தி வங்கியினால் மீள் அச்சிடப்பட்ட (Reprint) அதன் பிரதியை நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**02. விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக இணையத்தளத்திலுள்ள நிகழ்நிலை விண்ணப்பப்படிவமான https://forms.gle/unWPxv1jNGQpsLH67 னை பூர்த்தி செய்து அனுப்புவதோடு அதன் பதிவிறக்கம் செய்யப்பட்ட அச்சுப்பிரதியை அறிவுறுத்தல்களுக்கு அமைய முறைப்படி ஒப்பமிட்டு, கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு என்பவற்றை இணைத்து பிரதி பதிவாளர், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**03. கட்டண விபரம்**

| கட்டண விபரம் | தொகை (Rs.) |
|---|---:|
| விண்ணப்பத்தை செயற்படுத்தல் | 1,500.00 |
| முதலாம் வருடம் | 40,000.00 |
| இரண்டாம் வருடம் | 40,000.00 |
| மூன்றாம் வருடம் | 40,000.00 |
| **மொத்தம்** | **121,500.00** |

(இக்கற்கை நெறிக்கட்டணமானது கருத்தரங்கு, தொடர்மதிப்பீடு, பருவப் பரீட்சை, பாடக்குறிப்புகள், பதிவுப்புத்தகம் போன்ற அனைத்து வகையான கட்டணங்களையும் உள்ளடக்கியிருக்கின்றது)

**04. மொழி**

கற்கைநெறியின் முதலாம் வருடம் தமிழ் மொழியிலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடங்கள் தமிழ் ஆங்கில மொழிகளிலும் நடைபெறும்.

**குறிப்பு** - இப்பாட நெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்கள் பின்வருமாறு 03 தொகுதிகளாக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒரு பாடத்தினை கட்டாயம் தெரிவு செய்தல் வேண்டும்.

| முதலாவது தொகுதி | இரண்டாவது தொகுதி | மூன்றாவது தொகுதி |
|---|---|---|
| Sociology | Economics | Hindu Civilization |
| Political Science | English Literature | History |
| Tamil | Statistics | TESL (Teaching English as a Second Language) |
| Geography | GIS | Public Administration ( Students could choose either Political Science or Public Administration, not Both) |
| Philosophy | Information Communication Technology | Education |

மாணவர்கள் ஒவ்வொரு தொகுதியிலுமிருந்து ஒவ்வொரு பாடத்தை விருப்பொழுங்கு அடிப்படையில் தெரிவுசெய்வதோடு மொத்த மாணவர் தொகையில் 25% ஐ விட அதிகமாகாத வகையில் ஒவ்வொரு பாடத்திற்கும் அனுமதிக்கப்படுவர். இதன்போது தெரிவானது நுழைவுப்பரீட்சையின் புள்ளியின் அடிப்படையில் அல்லது தகுந்த பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படும்.

பிரதிப்பதிவாளர்
வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
பதிவாளருக்காக